

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள காமராஜர் அரங்கத்தில் நேற்று (14–10–2024) திங்கட்கிழமை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில், காங்கிரஸ் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ், பாஜகவின் வெறுப்பு அரசியலை எதிர்த்து இந்தியா கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்ற மாபெரும் கண்டன கூட்டத்தில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்றினார். உடன், திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, வி.சி.க தலைவர் தொல் திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர் கே.எஸ்.அழகிரி, பீட்டர் அல்போன்ஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் திரு.காதர் மொகிதீன், மனித நேய மக்கள் கட்சி ஜவாகிருல்லா, தமிழக வாழ்வுரிமைக் கட்சி வேணுகோபால், கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சி ஈ.ஆர்.ஈஸ்வரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

சிகரெட் லைட்டர்கள் தயாரிப்புக்கான உதிரி பாகங்கள் இறக்குமதிக்கும் தடை!

# ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயலுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி!

## ‘சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் கழிவுகளும் குறையும்’ என கருத்து!

சென்னை, அக்.15-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த வலைதளப் பதிவொன்றில், சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரிபாகங்களின் இறக்குமதிக்கும் தடை விதித்துள்ள ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயலுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:

எனது கோரிக்கைகளை முழுமையாக ஏற்று, ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய - 20 ரூபாய்க்குக் குறைவான பிளாஸ்டிக் சிகரெட் லைட்டர்களுக்குக் கடந்த ஆண்டு தடை விதித்ததைத் தொடர்ந்து, தற்போது சிகரெட் லைட்டர்களின் தயாரிப்புக்கான உதிரிபாகங்களின் இறக்குமதிக்கும் தடை விதித்துள்ளமைக்காக ஒன்றிய அமைச்சர் பியுஷ் கோயல் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முடிவு வரவேற்புக்குரியது.

இதனால் தமிழ்நாட்டின் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் வலுப்பெறுவதுடன், சுமார் ஒரு லட்சம் பேரின் வேலைவாய்ப்புகள் பாதுகாக்கப்படும். மேலும், சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் பிளாஸ்டிக் கழிவுகளும் குறையும்.

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக

# அயராது போராடியவர் பேராசிரியர் ஜி.என்.சாய்பாபா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 15 –

ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அயராது போராடிய போராளி மறைந்த பேராசிரியர் ஜி.என். சாய்பாபா என்று தமது இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**பேராசிரியர் ஜி.என். சாய்பாபா அவர்களது மறைவு மனித உரிமைச் செயற்பாட்டுச் சமூகத்துக்கு ஏற்பட்ட பெரும் இழப்பாகும். தனது சுதந்திரமும் உடல்நிலையும் அச்சுறுத்தலில் இருந்தபோதும் கூட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக அயராது போராடிய போராளி அவர். பல சவால்களை எதிர்கொண்ட நிலையிலும் சிவில் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அவர் காட்டிய நெஞ்சுரம் வாய்மைக்கான நிலைத்த அடையாளமாக என்றும் நினைவு கூரப்படும்.**

**அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், அவரது அன்புக்குரியோர்க்கும் இந்தக் கடினமான வேளையில் எனது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வடகிழக்குப் பருவமழை!

# கடலூர் மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆய்வுக் கூட்டம்!

## மாவட்ட ஆட்சியர் தலைமையில்!

கடலூர், அக் 15-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை2024 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில் அரசு அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனியார் மருத்துவமனைகள், தனியார் பள்ளிகள், தொலை தொடர்பு நிறுவனங்கள், எண்ணெய் நிறுவனங்கள் கல்லூரி முதல்வர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியோர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர், உதவி வேளாண்மை அலுவலர், கிராம சுகாதார செவிலியர் ஆகியோர் அடங்கிய கிராம குழுக்களுடன் இணைந்து பணிபுரியவும், பேரிடர் சமயங்களில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான தங்குமிடங்களுக்கு கொண்டு சென்று அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், உடை மற்றும் மருத்துவ வசதிகளை செய்திடவும், தாழ்வான பகுதிகள் மற்றும் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களில் உள்ள பொதுமக்களுக்கு வெள்ள மீட்புப் பணிகள் தொடர்பாகவும், வெள்ள நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட் மக்களுக்கு குறிப்பாக முதியோர்களுக்கு, மாற்றுத் திறனாளிகளுக்கு சரியான முறையில் சென்றடைவதற்கு தேவையான உதவிகளை வழங்கவும் மாவட்ட நிர்வாகத்திற்கு உதவி செய்தல் வேண்டும்.

தனியார் மருத்துவமனைகளில் ஜெனரேட்டர்கள் முதல் தளம் அல்லது அதற்கு மேல் உள்ள தளத்தில் வைக்கப்பட வேண்டும் எனவும், மின்சாரம் இல்லாத போது உபயோகிக்க ஏதுவாக பேட்டரிகள் மற்றும் டீசல் தயார் நிலையில் வைத்திருக்கவும், ஆக்ஸிஜன் சிலிண்டர் மற்றும் மருந்து பொருட்கள் போதுமான அளவில் இருப்பு வைத்திடவும், கொசுக்கள் உருவாகாதபடி மருத்துவமனைகள் சுத்தமாகவும், தண்ணீர் தேங்காமலும் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும், மின்சார ஜெனரேட்டர்களின் இருப்பினை உறுதி செய்திடவும், குறிப்பாக ICU/CCU தொடர்ந்து இயங்கிட உரிய நடவடிக்கை எடுக்கவும், ஆக்ஸிஜன் சிலிண்டர் மற்றும் அவசரகால தேவைக்கு பயன்படும் உபகரணங்கள் பயன்படுத்தும் வகையில் போதுமான அளவில் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

அரசு மற்றும் தனியார் பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் மழையினால் பாதிக்கப்படக் கூடிய நிலையில் இருந்தால் அதனை பழுது நீக்கம் செய்து மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், பள்ளியில் விடுதிகளில் பேரிடர் காலத்தில் உணவு தயார் செய்ய போதுமான மளிகைப் பொருட்கள் மற்றும் எரிவாயு உருளைகள் தயார் நிலையில் வைக்கவும், தங்கும் விடுதிகளில் பேரிடர் காலங்களில் மாணவர்களுக்கு தேவையான உணவு பொருட்கள் மற்றும் தேவையான அனைத்துப் பொருட்களும் தயார் நிலையில் வைத்திருக்கவும் அறிவுறுத்தினார்.

தொலை தொடர்பு கோபுரங்கள் உயரமான இடத்தில் அமைக்கவும், பேரிடர் காலத்தில் தொலை தொடர்பு துண்டிப்பு ஏற்படாவண்ணம் டீசல், ஜெனரேட்டர் வசதிகளை தயார் வைக்கப்பட்டுள்ளதாகவும், எண்ணெய் நிறுவனங்கள் மூலம் பேரிடர் காலத்தில் பெட்ரோல் மற்றும் டீசல் தட்டுப்பாடு இல்லாமல் பொதுமக்களுக்கு கிடைக்க ஒருவார காலத்திற்கு தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பேரிடர் சமயங்களில் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான தங்குமிடங்களுக்கு கொண்டு செல்வதுடன் பாதுகாப்பு மையங்கள் மூலம் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதி மற்றும் உணவு, குடிநீர், உடை மற்றும் மருத்துவ வசதிகளை வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

TN ALERT செயலியினை அனைவரும் பதிவிறக்கம் செய்து அதில் தங்கள் சுய விவரங்களை பதிவு செய்து கொள்வதால், பேரிடர் தொடர்பான அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம் என தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தொடர்பாக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பேரிடர் கால நடவடிக்கைக்காக அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 24 மணி நேரமும் செயல்படும் வகையில், அனைத்துத் துறை அலுவலர்களை உள்ளடக்கிய அவசர கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியிலும், 04142220700 எண் கொண்ட தொலைபேசியிலும் மற்றும் 9489930520 என்ற எண்ணிற்கு வாட்ஸ்ஆப் வாயிலாகவும், மழை, வெள்ளம் மற்றும் பேரிடர்கள் குறித்து தகவல் அளிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ம.இராஜசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) ரவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எள்ளப்பன், பேரிடர் மேலாண்மை வட்டாட்சியர் ஹரிதாஸ் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோவை – பள்ளிப்பாளையம் பேரூராட்சி

# தொடக்கப்பள்ளிக்கு புதிய கட்டடம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

கோவை. அக். 15-

கோயம்புத்தூர் மாவட்டம், பள்ளபாளையம் பேரூராட்சி தொடக்கப் பள்ளியில் ரூ.1.70கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளி கட்டடத்தை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்துவைத்தார்.

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பள்ளபாளையம் பேரூராட்சி தொடக்கப்பள்ளியில் பிரிக்கால் நிறுவனத்தின் சிஎஸ்ஆர் நிதியிலிருந்து ரூ.1.70கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளி கட்டடத்தை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்துவைத்தார். மேலும், வின்சென்ட் சாலையில் உள்ள, மன்பஉல் உலூம் மெட்ரிகுலேஷன் பள்ளி வளாகத்தில், அப்பள்ளியினை, மேல்நிலை பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதற்கான துவக்க விழா பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து, செம்மொழி பூங்கா வளாகத்தில், கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைப்பதற்கான இடத்தினை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார், சூலூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.கந்தசாமி, மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். ரங்கநாயகி, கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) திருமதி. ஸ்வேதாசுமன் பிரிக்கால் லிமிடெட் நிறுவனர் விஜய்மோகன், தலைவர் திருமதி. வனிதா மோகன், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், மாநில பெற்றோர் ஆசிரியர் சங்க துணைத் தலைவர் முத்துக்குமார், பள்ளபாளையம் பேரூராட்சி தலைவர் பி.எஸ்.செல்வராஜ். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆர்.பாலமுரளி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது,

ஒரு மனிதன் எவ்வளவு படித்தாலும், அவருடைய கல்விக்கு அடித்தளமாக விளங்குவது தொடக்க கல்விதான். ஒரு கட்டடத்திற்கு அடித்தளம் எந்த அளவிற்கு அவசியமானதோ அதே போன்றதுதான் இந்த தொடக்ககல்வி என்பது அனைத்து படிப்புகளுக்கும் அடித்தளமாக இருக்கின்றது. இந்த கட்டடம் என்பது உங்களுக்கானது மட்டுமல்லாது வருங்காலத்தில் தமிழ்நாட்டை கட்டமைக்கின்ற பணியில் நீங்கள் எல்லாம் ஈடுபடவேண்டும் என்றவகையில், இந்த கட்டடம் மிக அழகாக கட்டப்பட்டுள்ளது.

இந்த கட்டடம் கட்டுவதற்கு பிரிக்கால் நிறுவனம் ரூ.1.70 கோடியினை செலவிட்டுள்ளது. இதனை செலவு என்று சொல்வதை விட இந்த துறையில் செய்துள்ள முதலீடு என்று சொல்வதை பொருந்தும். முதலீடு என்று சொல்வதற்கு காரணம் சமுதாய வளர்ச்சி என்ற மிகப்பெரிய வட்டியினை உங்களுக்கு திருப்பி தரவேண்டியது எங்களுடைய கடமையாகும். அரசியல் சாசனத்தை எழுதும் போதே, 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாயமாக அடிப்படை கல்வி சென்றடைய வேண்டும். என்று கூறியவர்தான் நம் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். அதனை பின்பற்றி நடப்பவர்தான் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அதனால் வேறு எந்ததுறைக்கும் இல்லாத வகையில், பள்ளிக் கல்வித்துறை ரூ.44,042 கோடி நிதி ஒதுக்கீடு செய்தார்கள். வேளாண்மைத் துறையினை காட்டிலும், பள்ளிக்கல்வித்துறை அதிகமாக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது பள்ளிக் கல்விதுறை மீது அவர் வைத்துள்ள நம்பிக்கையை காட்டுகிறது. அதனால் இத்துறை பல்வேறு வகையில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

அந்தவகையில், முதலமைச்சரின் காலை உணவு திட்டம் என்பது உலகத்தில் வேறு எங்குமில்லாத ஒரு சிறந்த திட்டமாகும். அரசுப்பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து குழந்தைகளும் வயிறு நிறைய சாப்பிடுவதால், அவர்களின் பெற்றோரும் இத்திட்டத்திற்கு நல்ல வரவேற்பு அளித்து வருகின்றனர். எண்ணும் எழுத்தும் திட்டத்தின் கீழ் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நன்றாக எழுதவும், படிக்கவும், வாசிக்கவும், கணக்குகளை நன்றாக செய்யவும் கற்றுத்தரப்படுகிறது.

மேலும், 22,939 தொடக்கப்பள்ளிகளில் ரூ.435கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட் வகுப்புகள் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 6 ஆம் வகுப்பு 12 ஆம் வகுப்பு வரையுள்ள குழந்தைகளின் தனித் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு கலைப்பண்பாட்டு கொண்டாட்டம் நடத்தப்படுகின்றது. மேலும், தற்போது 1 மற்றும் 5 வகுப்புகளும் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது மட்டுமே பெற்றோரின் கடமையாக இருக்கவேண்டும். பள்ளி படிப்பு முடிந்தவுடன் புதுமைப்பெண், தமிழ்புதல்வன் திட்டங்கள் வாயிலாக கல்லூரி படிப்பும், கல்லூரி முடிந்தபிறகு நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் மேம்பாட்டு வளர்ச்சியும், வேலைவாய்ப்புகளையும் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் உருவாக்கி தந்துள்ளார்கள்.

உங்களுடைய பெற்றோர்கள் உங்களுக்கு கற்றுத்தரும் நல்லபழக்கங்களை பின்பற்றி நீங்கள் நல்லபடியாக நடந்துகொள்ளவேண்டும் ஆசிரியர்கள் உங்களுடைய இரண்டாவது பெற்றோர். தங்கள் சொந்த பிள்ளைகளை விட பள்ளியில் உள்ள உங்களுடன்தான் அதிகநேரம் செலவிடுகிறார்கள். அதனால் உங்களது இரண்டாவது பெற்றோர்கள் ஆவார்கள். எனவே, கூறும் அறிவுரைகளை பின்பற்றி நல்ல குழந்தைகளாக இருக்கவேண்டும். நன்றாக படிக்க வேண்டும். படித்த பள்ளியையும், கற்றுத்தந்த ஆசிரியர்களையும் எந்தகாலத்திலும் மறந்து விடக்கூடாது. உங்கள் வாழ்க்கைக்கான ஏணிப்படிகள். நீங்கள் வருங்காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், இந்திய ஆட்சிப்பணி, ஒரு நிறுவனத்தில் உயர் அலுவலர், தொழில் அதிபர், போன்ற எந்தவொரு பணியில் இருந்தாலும், மறந்துவிடாமல் பிரிக்கால் நிறுவனம் போல் நல்லவேலைகளையும் நீங்களும் செய்யவேண்டும். சிஎஸ்.ஆர். நிதியினை வழங்கும் பணியினை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்தபோது தன்னுடைய சொந்த நிதியிலிருந்து ரூ.5 இலட்சம் வழங்கி இந்த பணியினை தொடங்கி வைத்தார்கள். பிரிக்கால் நிறுவனம் தன்னுடைய சிஎஸ்.ஆர். நிதியிலிருந்து இந்தபள்ளி கட்டடத்தை கட்டி தந்தமைக்கு மாணவ செல்வங்கள் சார்பில் என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

# வடகிழக்குப் பருவ மழை! உத்திரமேரூரில் ‘உங்களைத் தேடி உங்கள் ஊர் திட்டம்’ ஒத்திவைப்பு!

## மாவட்ட ஆட்சியர் தகவல்!

காஞ்சிபுரம், அக் 15-

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின்படி 16.10.2024 தேதி உத்திரமேரூர் வட்டம் தேர்வு செய்யப்பட்டு பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டது. தற்போது வடகிழக்கு பருவமழை காரணமாக 16.10.2024 தேதி உத்திரமேரூர் வட்டத்தில் நடைப்பெறவிருந்த “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டம் ஒத்தி வைக்கப்படுகிறது. மேற்படி திட்டம் நடைப்பெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், தெரிவித்துள்ளார்.



கலைஞர் தொலைக்காட்சியின் தலைமை செய்தி ஆசிரியர் ப.திருமாவேலன் அவர்களின் தாயார் ப.முத்துலட்சுமி (வயது 82) 10.10.2024 அன்று பாளையங் கோட்டை ராம்நகரில் உள்ள இல்லத்தில் மறைவெய்தினார். அன்னாரது இல்லத்திற்கு பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி நேரில் சென்று மறைந்த ப.முத்துலட்சுமி அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன்,வழக்கறிஞர் தினேஷ்,ம.தி.மு.க.செய்தி தொடர்பாளர் மின்னல் முகமது அலி உள்பட பலர் உள்ளனர்.